# ‘கோரோனாவைரஸ் (கோவிட்-19): இயலாமை உள்ளவர்களுக்கான ஆதரவுதவிகள்

## ‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway)

‘கோரோனாவைரஸ்’ காரணமாக உதவி தேவைப்படும் இயலாமை உள்ளவர்களுக்கான தகவல்கள் மற்றும் பரிந்துரைகளை ‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) எனும் சேவை அளிக்கிறது. குடும்பத்தினர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் ஆதரவுதவி சேவகர்கள் ஆகியோருக்கும் இந்த சேவையினால் உதவ இயலும்.

‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) சேவையினருடன் **1800 643 787**-இல் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) சேவையானது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை கிடைக்கும். வார-இறுதி நாட்கள் அல்லது தேசிய பொது விடுமுறை நாட்களில் இந்த சேவை கிடைக்காது.

நீங்கள் செவித்திறன் அற்றவராகவோ, செவித்திறன் அல்லது பேச்சுத்திறன் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால், ‘தேசிய தொடர்-மாற்று சேவை’ (National Relay Service)-யுடன் நீங்கள் **133 677**-இல் தொடர்புகொள்ளலாம்.

உங்களுக்கு வேறொரு மொழியில் உதவி தேவைப்பட்டால், பின் வருவனவற்றின் மூலம் நீங்கள் ‘மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்துரைப்பு சேவை’ (Translating and Interpreting Service (TIS National))-யுடன் தொடர்புகொள்ளலாம்:

- ‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) சேவையினை **1800 643 787**-இல் அழைத்து மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள், அல்லது
- **131 450**-இல் TIS -ஐ அழைத்து ‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) சேவையுடன் **1800 643 787** -இல் தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு கேளுங்கள்.

## ‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) சேவையை அழைப்பது ஏன் நல்லது?

உங்களுடைய தேவைகளைப் புரிந்துகொள்ளக் கூடிய ஒருவருடன் நீங்கள் பேச இயலவேண்டும் என்பதற்காக ‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) எனும் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நீங்கள் தனித்துவிட்டதாக நினைத்தாலோ, ‘கொரோனாவைரஸ்’-ஐப் பற்றிக் குழப்பமாக அல்லது பதற்றத்துடன் இருந்தாலோ, அல்லது இயலாமையுடையோரைப் பாதிக்கக்கூடிய குறிப்பிட்ட சில சூழல்களைப் பற்றி நீங்கள் கலந்துபேச விரும்பினாலோ, எம்மால் உதவ இயலும். உதரணமாக, உங்களுடைய ஆதரவுதவி சேவகர் வரவில்லை என்றாலோ, உங்களுடைய சேவை வழங்குநர் உங்களுக்கு சேவைகள் அளிப்பதை நிறுத்திவிட்டிருந்தாலோ, சாப்பாடு, மருந்துகள் அல்லது மற்ற அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதில் உங்களுக்கு சிரமங்கள் இருந்தாலோ எம்மால் உங்களுக்கு உதவ இயலும்.

‘இயலாமை உடையோருக்கான உதவிப்பாதை’ (The Disability Gateway) சேவையானது உங்களுக்கு தெளிவான, மற்றும் உண்மையென உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை அளிக்கும், மற்றும் நீங்கள் விரும்பினால் உங்களுக்கு அடுத்ததாக உதவக்கூடிய அறிவுரையாலோசனை அல்லது பரிந்துரை சேவைகளுக்கு உங்களை மாற்றம் செய்யும்.

## ‘கொரோனாவைரஸ்’-ஐப் பற்றிய உங்களுக்குக் கிடைக்கக்கூடிய மொழிபெயர்க்கப்பட்ட மூலவளங்கள்

‘எளிய வாசிப்பு’ (Easy Read) மற்றும் ‘ஆஸ்லன்’ (Auslan) ஆகியவற்றை உள்ளடக்கிய நீங்கள் அணுகிப் பெறவல்ல ‘கொரோனாவைரஸ்’-ஐப் பற்றிய பலதரப்பட்ட மூலவளங்கள் **www.disabilitygateway.gov.au** எனும் வலைத்தலத்தில் கிடைக்கும்.

‘கொரோனாவைரஸ்’-ஐப் பற்றி 63 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தகவல்களையும் நீங்கள் **‘உள்நாட்டு விவகாரத் திணைக்கள’** (**Department of Home Affairs website**) த்தினது வலைத்தலத்தில் காணலாம்.

## மிகச் சமீபத்திய தகவல்கள்

இந்த ‘வைரஸ்’-இன் பரவலைக் குறைப்பதற்காக உங்களுடைய மாநில அல்லது எல்லைப்பகுதி அரசாங்கம் நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை உள்ளடக்கிய ‘கோரோனாவைரஸ்’-ஜப் பற்றி ஆஸ்திரேலியாவில் நிலவும் மிகச் சமீபத்திய சுகாதார மற்றும் அதிகாரபூர்வ அறிவுரைகள் மற்றும் புதுச் செய்திகளைத் தெரிந்துகொள்ள **‘ஆஸ்திரேலிய அரசாங்க வலைத்தல’(Australian Government website)** த்திற்குச் செல்லுங்கள்.

## முறைப்பாடு ஒன்றைச் செய்வது எப்படி

தாம் பெற்றுவரும் சேவைகளைப் பற்றி முறைப்பாடு செய்யும் உரிமை இயலாமையுடையவர்களுக்கு இருக்கிறது. நீங்கள் தற்சமயம் பெற்றுவரும் ஆதரவுதவிகள் அல்லது சேவைகளைப் பற்றிய கவலை ஒன்று உங்களுக்கு இருந்தால், நீங்கள் தொடர்புகொள்ள இயலுமானவர்கள்:

- **‘NDIS தரம் மற்றும் பாதுகாப்பு ஆணையம்’** (**NDIS Quality and Safeguards Commission**) – நீங்கள் பெற்றுவரும் NDIS ஆதரவுதவிகள் அல்லது சேவைகளின் தரம் அல்லது பாதுகாப்பினைப் பற்றிய கவலை ஒன்று உங்களுக்கிருந்தால்

- ‘தேசிய உடலியலாமை காப்பீட்டு முகமை’ (National Disability Insurance Agency (NDIA)) உங்களுடைய NDIS திட்டம் அல்லது NDIA - ஐப் பற்றிய கவலை ஒன்று உங்களுக்கு இருந்தால்
- **‘துஷ்ப்பிரயோகம் மற்றும் புறக்கணிப்புத் தடுப்பு - தேசிய அவசர-உதவியிணைப்பு’ (National Abuse and Neglect Hotline) -** இயலாமை உள்ளவர்கள் துஷ்ப்பிரயோகிக்கப்படுவதை அல்லது புறக்கணிக்கப்படுவதைத் தெரிவிப்பதற்கான உதவி இணைப்பு
- **‘முறைப்பாட்டுத் தீர்வு மற்றும் பரிந்துரை சேவை’ (Complaints Resolution and Referral Service)** – ‘இயலாமையுடையோர் வேலைவாய்ப்பு சேவைகள்’ (Disability Employment Services (DES)), ‘ஆஸ்திரேலிய உடலியாலாமைத் தொழில்முனைவுகள்’ (Australian Disability Enterprises (ADE)) மற்றும்/அல்லது ‘இயலாமையுடையோருக்கான பரிந்துரை சேவைகள்’ (Disability Advocacy services) ஆகியவற்றின் மூலமாக நீங்கள் பெறும் சேவைகள் குறித்த கவலை ஒன்று உங்களுக்கிருந்தால்
- **‘DSS முறைப்பாட்டுத் தொலைபேசி இணைப்பு’ (DSS complaints line)** ‘சமூக சேவைகள் திணைக்கள’(Department of Social Services)த்தினால் நிதியுதவியளிக்கப்படும் வேறு எவ்வொரு

சேவை வழங்குநரைப் பற்றியும் உங்களுக்குக் கவலை ஒன்று இருந்தால்.

# மேலதிகத் தகவல்கள்

இயலாமை உள்ளவர்களுக்கான பலதரப்பட்ட சேவைகள் மற்றும் திட்டங்களுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் நிதியுதவி அளிக்கிறது. நீங்கள் வேறு யாருடன் பேசலாம் என்பதைத் தெரிந்துகொள்ள, அல்லது மேலதிகத் தகவல்களுக்கு **www.disabilitygateway.gov.au** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது ஃபிப்ரவரி 2021.